மாலை முரசு

பக்கங்கள் 12

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆவணி 11 திங்கட்கிழமை 28.08.2023 அதிர்வு 28

# ரஜரட்ட பல்கலையில் மட்டு. மாணவன் சாவு

## நீச்சல் தடாகத்திலிருந்து சடலம் மீட்பு

ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் நீச்சல் தடாகத்தில் நீராடச் சென்ற பல்கலைக் கழக மாணவர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என்று 04▶

### நாம் சிங்கள பௌத்தர்களுக்கு எதிரானவர்கள் அல்லர்



# தமிழர்களின் அடையாளங்களை அழிப்பதை உடன் நிறுத்துங்கள்!



### கம்மன்பிலவுக்குக் கஜேந்திரகுமார் பதிலடி

"தமிழ் மக்களின் உரிமைகள் மற்றும் தமிழர்களின் தொல்லியல் அடையாளங்களை அழிக்கக்கூடிய வகையில் செயற்படுவதை சிங்கள பௌத்தர்கள் உடனடியாக நிறுத்த வேண்டும்." 04▶

# இந்தியாவின் கரிசனைக்கு முரணான எந்தச் செயற்பாட்டையும் ஆதரியோம்

### தமிழ்க் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் சுட்டிக்காட்டு



"இந்தியாவின் நட்பு நாடு அல்லாத, இந்து சமுத்திரப் பிராந்தியத்தைச் சாராத சீனா, இப்பிராந்தியத்தின் பிறிதொரு நாட்டில் முன்னெடுக்கக்கூடிய சில நடவடிக்கைகள் இந்தியாவுக்குப் பாதுகாப்புக் கரிசனைகளைத் தோற்றுவிப்பது முற்றிலும் நியாயமானது. 04▶




### யாழ்ப்பாணத்தில் இன்று

# 9 தொழிற்சங்கங்கள் சேர்ந்து அரசுக்கு எதிராகப் போராட்டம்

எஸ்.நிதர்ஷன்

ஊழியர் சேமலாப நிதி (ஈ.பி.எவ்.) மற்றும் நம்பிக்கை பொறுப்பு நிதியை (ஈ.ரி.எவ்.) உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புக்குப் பயன்படுத்த முனைவதற்கு எதிராக யாழ்ப்பாணத்தில் இன்று 04▶

# கொழும்பிலும் இன்று ஆர்ப்பாட்டம்



அரசாங்கத்தின் உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டங்களுக்கு எதிராக இன்று கொழும்பு ரயில் நிலையத்துக்கு முன்பாகவும் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தின் பொருளாதார மீட்சிக்கான உள்நாட்டு கடன் மறுசீரமைப்பு செயல்முறையின் ஒரு பகுதியாக ஊழியர் சேமலாப 04▶

### கொலைக்களமாக மாறும் கொழும்பு

# இன்றும் ஒருவர் சுட்டுக் கொலை!



கொழும்பில் குடும்பஸ்தர் ஒருவர் இன்று சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் வெல்லம்பிட்டி பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

ஓட்டோவில் பயணித்த 47 வயதுடைய நபரே இவ்வாறு சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். 04▶

# தெல்லிப்பழை துர்க்கை அம்மன் தேர்



யாழ்ப்பாணம் தெல்லிப்பழை துர்ப்பை அம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் தேர்த் திருவிழா இன்று நடைபெற்றது.











# நாய் உண்ணி காரணமாக பாடசாலை மூடப்பட்டது

நாய் உண்ணி காரணமாக காலி, பலப்பிட்டி ரேவத தேசிய பாடசாலையின் ஆரம்பப் பிரிவு இன்றும் நாளையும் மூடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை முழுவதும் நாய் உண்ணி மற்றும் கண்ணுக்குத் தெரியாத உண்ணிகளும் இருப்பதாக பாடசாலையின் அதிபர் தாமரா குமாரி குறிப்பிட்டார்.

இது தொடர்பில் பொது சுகாதார பரிசோதகர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அவற்றை அழிப்பதற்கான நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மருத்துவரின் அறிவுரைக்கு அமைய மருந்துகளை பயன்படுத்தி உண்ணிகளை அழிக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமையால் மாணவர்களின் பாதுகாப்பு கருதி இரண்டு நாள்களுக்குப் பாடசாலை மூடப்படுவதாக அதிபர் மேலும் தெரிவித்தார்.

# பசறையில் வீட்டிலிருந்து வயோதிபரின் சடலம் மீட்பு

பசறையில் வயோதிபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

பசறை, 13 ஆம் கட்டை – லுணுபிஸ்ஸ பதன பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்தே சடலம் மீட்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியில் உள்ள வீடொன்றில் ஒருவர் உயிரிழந்த நிலையில் காணப்படுகின்றார் என்று பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

அந்தப் பகுதியைச் சேர்ந்த 71 வயதான நபரே உயிரிழந்துள்ளார். அவர் உயிரிழந்தமைக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படவில்லை.

இந்தநிலையில், பதுளை நீதிவானின் களப் பரிசோதனையின் பின்னர் சடலம் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



## ஊடகவியலாளருக்கு 'ரொப் 100' விருது




கிழக்கு மாகாண கூட்டுறவு ஊழியர்கள் ஆணைக்குழு உறுப்பினரும், ஊடகவியலாளருமான நூருல் ஹுதா உமர், பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த சனிக் கிழமை இடம்பெற்ற அகாசா நிறுவனத்தின் ஸ்ரீ லங்கன் 'ரொப் 100' விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

15 வருடங்களாக ஊடகத்துறையில் பணியாற்றிவரும் இவர் ஆய்வுக் கட்டுரைகளை வரைவதிலும், சமூக பிரச்சினை களை துணிச்சலுடன் ஊடகங்களுக்கு அறிக்கையிடுவதிலும் முன்னிலை வகிக்கும் ஒருவராவார். அரசியல், சமூக, சமய, பொருளாதார பிரச்சினைகளை வெளிக்கொண்டுவரும் இவர் ஊடகத்துறைக்காக இந்த ஸ்ரீலங்கன் டொப் 100 விருதை தனதாக்கியுள்ளார்.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பல்வேறு துறை சார்ந்த சாதனையாளர்களைக் கௌரவிக்கும் விதமாக இடம்பெற்ற அகாசா நிறுவனத்தின் ஸ்ரீலங்கன் டொப் 100 விருது வழங்கிக் கௌரவிக்கும நிகழ்வில் நீதியமைச்சர் விஜய-தாச ராஜபக்ஸ, நாடாளுமன்ற உறுப்பினர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகர, இலக்கிய புரவலர் காஸிம் உமர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பணிப்பாளர் ஹட்சன் சமரசிங்க, மதகுருமார்கள், ஊடக நிறுவன பிரதானிகள், பத்திரிகை ஆசிரியர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## இலங்கைக்கு மேல் நேரடியாக உச்சத்துக்கு வருகிறது சூரியன்



இன்று திங்கட்கிழமை முதல் இலங்கைக்கு மேல் நேரடி யாக சூரியன் உச்சம் கொடுக்க உள்ளமையால் நாட்டின் பலப் பகுதிகளில் வெப்பநிலை அதிகமாக காணப்படும் எனவும், எதிர்வரும் 07 ஆம் திகதி வரை இந்தக் கால நிலை தொடரும் எனவும் வளிமண்டலவியல் திணைக் களம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக இன்று (28) மதியம் 12.11 மணியளவில் கோவிலன் முனை மற்றும் மல்லாகம் (யாழ்ப்பாணம் மாவட்டம்) ஆகிய பகுதிகளில் சூரியனின் உச்சம் மிக வும் அதிகமாக காணப்படும் எனவும் வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக இந்த 10 நாள்களுக்கு மிகவும் அவதானமாக இருக்குமாறு பொதுமக்களிடம் வேண்டுகோள் விடுக்கப் பட்டுள்ளது. மேலும் அதிகளவில் நீர் அருந்துமாறும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

# வைத்தியசாலைக் கட்டுமானப் பணிகளை கண்காணிப்பதற்குக் குழுக்கள் நியமனம்





(றியாஸ் ஆதம் )

வைத்தியசாலைகளில் இடம்பெறும் கட்டுமானப் பணிகளை துரிதப்படுத்து வதற்கும், அதிலுள்ள பிரச்சினைகள் மற்றும் சவால்கள் தொடர்பில் ஆராய்ந்து நடவடிக்கை எடுப்பதற்கும் விசேட குழுக்களை நியமித்துள்ளார் என்று கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலா நிதி ஐ.எல்.எம்.றிபாஸ் தெரிவித்தார்.

உலக வங்கியின் அனுசரணையில் ஆரம்ப பராமரிப்பு சுகாதார நிறுவ னங்களை வலுப்படுத்துவதற்கான செயற்றிட்டத்தின் மீளாய்வுக் கூட்டம் சனிக்கிழமை (26) கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலா நிதி ஐ.எல்.எம்.றிபாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் திட்டமிடல் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் எம்.சீ.எம்.மாஹிர், கல்முனை பிராந்தியத்தில் உள்ள பிரதேச வைத்திய அதிகாரிகளும், ஆரம்பப் பராமரிப்பு சுகா தார பிரிவுகளின் பொறுப்பு வைத்திய அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

செயற்றிட்டத்தின் நோயாளர் பதி வேட்டைச் சிறப்பாக பேணியமைக்காக பாலமுனை மற்றும் பனங்காடு பிரதேச வைத்தியசாலைகளுக்கு இந்த நிகழ்வின் போது பணிப்பாளரினால் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**இந்தியாவின்...**

எனவே, இந்தியாவின் கரிசனைகளுக்கு முரணான எந்தவொரு செயற்பாட்டையும் நாம் ஆதரிக்கப்போவதில்லை.”

– இவ்வாறு சுட்டிக்காட்டினார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் இவ்வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவிருக்கும் அதேவேளை, எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 25 ஆம் திகதி ‘ஷி யான் 06’ என்ற சீன ஆய்வுக் கப்பல் இலங்கைக்கு வருகை தரவுள்ளது.

இவை இலங்கையில் இந்திய – சீன இராஜதந்திர மோதலுக்கு வழிவகுக்கும் எனவும், மேற்குறிப்பிட்ட நாடுகளுடனான இலங்கையின் இரு தரப்பு உறவுகளில் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் அரசியல் விமர்சகர்கள் அபிப்பிராயம் வெளியிட்டுள்ளனர்.

இருப்பினும் இலங்கைக்கும் இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளுக்கும் இடையிலான இரு தரப்பு உறவுகளில் எவ்விதமான பதற்றங்களும் இல்லை என்றும், இந்தியப் பாதுகாப்பு அமைச்சரின் விஜயம் மற்றும் சீன ஆய்வுக்கப்பலின் வருகை என்பன நிகழ்ச்சி நிரலிடப்பட்டதன் அடிப்படையில் நடைபெறுவதனால் எவ்விதமான குழப்பங்களும் இல்லை என்றும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில் இந்தியாவின் பாதுகாப்புக் கரிசனைகள் நியாயமானவை என்று இதற்கு முன்னரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் கூறியிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் எம்.பி., இந்த விவகாரத்திலும் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமைந்துள்ள இந்தியா வெளிப்படுத்தும் பாதுகாப்பு தொடர்பான கரிசனைகள் முற்றிலும் நியாயமானவை என்று சுட்டிக்காட்டினார்.

இந்தியாவுக்குச் சார்பாகச் செயற்பட வேண்டும் என்ற நோக்கில் இக்கருத்தை வெளியிடவில்லை எனக் குறிப்பிட்ட அவர், “இந்தியா இந்து சமுத்திரப்பிராந்தியத்தில் உள்ளது. இருப்பினும் சீனா இப்பிராந்தியத்துக்கு உட்பட்ட நாடு அல்ல. எனவே, இந்தியாவின் நட்பு நாடு அல்லாத சீனா, இப்பிராந்தியத்தின் பிறிதொரு நாட்டில் முன்னெடுக்கக்கூடிய சில நடவடிக்கைகள் இந்தியாவுக்கு பாதுகாப்புசார் கரிசனைகளைத் தோற்றுவிப்பது நியாயமான தொன்றேயாகும்” என்றும் தெரிவித்தார்.

அதுமாத்திரமன்றி இந்த விடயத்தில் எவ்வித முரண்பாடுகளும் இல்லை என்று இலங்கை அரசு கூறுவதில் அர்த்தமில்லை என்றும், மாறாக இதில் இந்தியாவின் கருத்துக்கு இடமளிக்க வேண்டும் என்றும் வலியுறுத்திய சுமந்திரன் எம்.பி., இந்தியாவின் கரிசனைகளுக்கு முரணான எந்தவொரு செயற்பாட்டையும் தாம் ஆதரிக்கப்போவதில்லை என்றும் குறிப்பிட்டார்.

---

**9 தொழிற்சங்கங்கள்...**

போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ். மாவட்ட செயலகத்துக்கு முன்னால் இன்று நண்பகல் மதியம் 12 மணி முதல் பிற்பகல் 1 மணி வரையிலான ஒரு மணி நேரம் இந்தப் போராட்டம் இடம்பெற்றது.

அமைச்சரவையில் 2023 ஜுலை 01ஆம் திகதி நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட பரிந்துரையின் மூலமாக ஊழியர் சேமலாப நிதியையும், நம்பிக்கை பொறுப்பு நிதியையும் உள்நாட்டு கடன் மறுசீரமைப்புக்குப் பயன்படுத்த அரசால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்த முனைவதன் மூலம் ஊழியர் சேமலாப, நம்பிக்கை பொறுப்பு நிதியங்களில் கணக்குகளைக் கொண்டுள்ள சுமார் 25 இலட்சம் உழைக்கும் வர்க்க அங்கத்தவர்களின் ஒரேயொரு ஓய்வூதியச் சேமிப்பை அவர்களின் அனுமதியின்றி பயன்படுத்த அரசு முயல்கின்றது என்றும், பொருளாதார நிபுணர்களின் எச்சரிக்கையின்படி இந்த உள்நாட்டுக் கடன் மறுசீரமைப்புத் திட்டம் ஊழியர் சேமலாப, நம்பிக்கை பொறுப்பு நிதியங்களின் கணக்குகளின் மீது சுமத்தப்படும் போது அனைத்து ஊழியர்களினதும் (ஊழியர் சேமலாப, நம்பிக்கை பொறுப்பு நிதியங்களின் அங்கத்தவர்களினதும்) சேமிப்புக்களில் இருந்தும் அரைவாசித்தொகை (50 வீதம்) எதிர்வரும் 16 வருட காலப்பகுதியில் இல்லால் போகும் அபாயம் உள்ளது என்றும், இதன் தொடர்ச்சியாக அரச ஊழியரின் ஓய்வூதிய நிதியையும் இவ்வாறு கையாள அரசு முற்படுகின்றது என்றும், இதன் மூலம் ஊழியர் சேமலாப, நம்பிக்கை பொறுப்பு நிதியங்களின் அங்கத்தவர்களுக்கு நிதி ரீதியான உடனடிப் பாதிப்பும் நீண்ட காலத்தில் முழுமையாக இவ்விரு நிதிகளும் கிடைக்கபெறாத அபாய நிலையும் உள்ளது என்றும் போராட்டகாரர்கள் குற்றம் சாட்டினர்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊழியர் சங்கம், வடக்கு மாகாண அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம், அகில இலங்கை அபிவிருத்தி உத்தியோகத்தர் சங்கம், பொது முகாமைத்துவ உதவியாளர் சேவைச் சங்கம், வடக்கு மாகாண சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் சங்கம் ,வடக்கு மாகாண கால்நடை போதனாசிரியர் சங்கம், ஸ்ரீலங்கா தபால் தொலைதொடர்பு சேவை உத்தியோகத்தர் சங்கம், வடக்கு மாகாண அரச சாரதிகள் சங்கம், வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் தொழிற்சங்கம் ஆகிய 9 தொழிற்சங்கங்கள் இந்தப் போராட்டத்துக்கு ஆதரவளித்தன.

---

**தமிழர்களின்...**

– இவ்வாறு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வலியுறுத்தியுள்ளார்.

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெற்கில் அனுபவிக்கும் சுதந்திரத்தை தாம் வடக்கில் அனுபவிப்பதற்கு இடமளிக்க வேண்டுமென வலியுறுத்தி பிவிதுரு ஹெல உறுமயவின் தலைவர் உதய கம்மன்பில தலைமையிலான குழுவினர், அவரது கொழும்பு இல்லம் முன்பாக ஆர்ப்பாட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ள கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பி. –

“எமது செயற்பாடுகள் அனைத்தும் வெளிப்படைத்தன்மை வாய்ந்தவையாக இருக்கின்றன.

அதேபோன்று தமது கருத்துக்களை வெளிப்படுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடுவதற்கான உரிமை சகலருக்கும் உண்டு. அதனை நாம் மறுதலிக்கவில்லை. அதேவேளை, நாம் ஒருபோதும் சிங்கள பௌத்தர்களுக்கு எதிரானவர்கள் அல்லர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள நீண்டகாலமாக மத வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டு வரும் பௌத்த விகாரைகளை அப்புறப்படுத்துமாறு நாம் கோரவில்லை.

மாறாக எமது மக்களின் உரிமைகளைப் பறிக்கக் கூடிய வகையிலும், தமிழர்களின் தொல்லியல் அடையாளங்களை அழிக்கக் கூடிய வகையிலும் முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளையே நிறுத்துமாறு வலியுறுத்துகின்றோம்.

தொல்பொருள் சின்னம் அல்லது பௌத்த சின்னம் என்ற பெயரில் தமிழ் மக்களின் அடையாளங்களையும் சரித்திரத்தையும் அழிப்பதற்கோ அல்லது மாற்றியமைப்பதற்கோ நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். அதனை முன்னிறுத்தியே நாம் செயற்பட்டு வருகின்றோம்.” – என்று குறிப்பிட்டுள்ளார்.

---

**கொழும்பிலும்...**

வைப்பு நிதி மற்றும் ஊழியர்களின் நம்பிக்கை நிதி ஆகியவற்றை மறுசீரமைப்பதற்கான அரசாங்கத்தின் முடிவை

ஆட்சேபிக்கும் வகையிலேயே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டத்தின் போது, தொழிற்சங்கவாதிகள் மற்றும் அரசியல்வாதிகள் உட்பட ஆர்ப்பாட்டக்காரர்கள் கொழும்பின் பல பகுதிகளுக்குள் நுழைவதைத் தடுக்கும் உத்தரவை கோட்டை நீதவான் நீதிமன்றம் பிறப்பித்துள்ளது.

இன்று காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம், நிதியமைச்சு மற்றும் மத்திய வங்கி ஆகியவற்றிற்குள் ஆர்ப்பாட்டக்காரர்கள் பிரவேசிப்பதைத் தடுக்கும் வகையில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

துமிந்த நாகமுவ, முஜிபுர் ரஹ்மான், ஹிருணிகா பிரேமச்சந்திர, சரித ஹேரத், வாசுதேவ நாணயக்கார, ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்ட 24 பிரதிவாதிகள் மற்றும் அவர்களுடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவுள்ளவர்களுக்கு நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.என்றாலும் தடை உத்தரவுகளை மீறி ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், நூற்றுக் கணக்கானவர்கள் அங்கு திரண்டிருந்தனர்.

---

**ரஜரட்ட...**

மிஹிந்தலை பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு, கொக்குவில் பிரதேசத்தைச் சேர்ந்த முருகதாஸ் திலக்சன் என்ற 21 வயதுடைய மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ரஜரட்ட பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தில் முதலாம் ஆண்டில் கல்வி கற்கும் இந்த மாணவன், பல்கலைக்கழகத்தின் ஏனைய மாணவர்கள் குழுவுடன் நேற்று மாலை 5 மணியளவில் பல்கலைக்கழக நீச்சல் தடாகத்தில் நீராடச் சென்றிருந்தார் என்று பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

---

**இன்றும் ஒருவர்...**

மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத இருவர் கைத்துப்பாக்கியால் அவரைச் சுட்டுவிட்டுத் தப்பியோடியுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு மேலும் குறிப்பிட்டுள்ளது.

கொலையாளிகளைக் கைது செய்வதற்கான விசாரணைகளை வெல்லம்பிட்டி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வில்பத்து, தப்போவ சரணாலயங்களில் வேட்டைக்குச் சென்ற 4 குழுவினர் கைது







வில்பத்து மற்றும் தப்போவ சரணாலயங்களில் வேட்டைக்குச் சென்ற 4 குழுக்களைச் சேர்ந்த 12 பேர் கருவலகஸ்வெவ மற்றும் வண்ணாத்திவில்லு வனஜீவராசிகள் திணைக்களத்தினரினால் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் 8 பேர் தப்பியோடியுள்ளனர் எனவும் அதிகாரிகள் இதன்போது தெரிவித்தனர்.

வில்பத்து மற்றும் தப்போவ சரணாலயங்களில் தொடர்ந்தும் சட்டவிரோதமாக விலங்குகள் வேட்டையாடப்பட்டு வருகின்றன எனக் கூறப்பட்ட நிலையில், இரண்டு நாள்களாகத் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டபோது நேற்று அதிகாலை இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு துப்பாக்கிகள், ரவைகள் – 26, உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஏழு ரவைகள், வேட்டைக்கு பயன்படுத்தப்படும் வெடிபொருள்கள், 5 தொலைபேசிகள், 7 கத்திகள் மற்றும் 7 மோட்டார் சைக்கிள்கள், வேட்டைக்குப் பயன்படுத்தப்பட்ட ஏனைய பொருள்கள் இவ்வாறு கைப்பற்றப்பட்டன என வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட 12 பேரையும் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் நேற்று மாலை பிணையில் விடுவித்தனர். புத்தளம் நீதிமன்றில் அவர்களை ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளைத் தாங்கள் முன்னெடுத்துள்ளனர் என வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.






# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## சீனக் கப்பலைத் தேடும் ஆய்வு

சீன ஆய்வுக் கப்பல் 'ஷி யான் - 6' ஒக்டோபர் மாத இறுதி தொடக்கம் இரண்டு வாரங்கள் இலங்கையில் தங்கி நின்று ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு இலங்கை அரசு அனுமதி அளித்துள்ள பின்னணியில், இந்த விடயம் அயல் தேசமான இந்தியாவின் அதிகரித்த கவனத்திற்குள்ளாகி இருப்பது முக்கியமாகின்றது.

இந்தக் கப்பல் இலங்கைக்கு வருவது தொடர்பில் முன்னர் இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட உடன்பாடு குறித்து புதிய விவரங்கள் இப்போது வெளிவரத் தொடங்கி இருக்கின்றன. அவை கவனத்திற்குரியவை.

இந்தக் கப்பல் மேற்கொள்ளவுள்ளதாகக் கூறப்படும் ஆய்வு தொடர்பில் முதல் உடன்படிக்கை ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் - 2014 செப்டம்பரில் - அப்போதைய மஹிந்த ராஜபக்ஷ அரசின் ஆட்சி காலத்தின் இறுதி கட்டத்தில் - இலங்கையில் கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தை ஆரம்பித்து வைப்பதற்காக சீன அதிபர் ஷி ஜின்பிங் கொழும்பு வந்த சமயம் செய்து கொள்ளப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின் கீழ் என்ன விடயம் பிரதான அம்சமாக அமைந்தது என்பது கவனிக்கத்தக்கது.

1410 - 1411 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இலங்கை மீது படையெடுக்க வந்த சீன கடற்படையின் தளபதி அட்மிரல் ஹி ஷெங்கின் கடற்படைக் கப்பல்களின் தொகுதி தென்னிலங்கைக் கடலில் மூழ்கியதாகக் கூறப்படுகின்றது. அதன் எச்சங்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்கான ஆய்வு என்ற பெயரிலேயே சீன அறிவியல் அகாடமியின் கட்புலப் பிரிவுடன் இலங்கையின் மத்திய கலாச்சார நிதியம் இந்த ஒப்பந்தத்தைச் செய்தது.

நல்லாட்சி அரசின் காலத்தில் மூன்று ஆய்வுகள் இந்த ஒப்பந்தத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்டன. அவற்றில் ஒன்றின் போது ஒரு கப்பலின் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டனவாயினும் அவை கடலில் மூழ்கிய நோர்வே கப்பல் ஒன்றினுடையவை என்று பின்னர் தெரிவிக்கப்பட்டது.

இந்த மூல ஒப்பந்தம் பின்னர் இரு தடவைகள் இரண்டு தரப்புக்களினதும் இணக்கத்துடன் திருத்தி அமைக்கப்பட்டது என்றும் கூறப்படுகின்றது.

கடந்த மூன்று ஆய்வுகளுக்கு மேலதிகமாக இன்னும் இரண்டு ஆய்வுகளை நடத்துவதற்கு மேற்படி ஒப்பந்தத்தில் இணக்கம் காணப்பட்டுள்ளது என்றும், அதில் முதலாவது இப்போது ஒக்டோபரில் இடம்பெற இருப்பதாகவும் இப்போதைய செய்திகள் தெரிவிக்கின்றன.

900 ஆண்டுகளுக்கு முன்னர் மூழ்கிய கப்பலின் எச்சங்களைக் கண்டுபிடித்தல் என்ற பெயரில் இலங்கை கடற்பரப்பில் ஆழக் கால் பரப்ப விரும்பும் சீனாவின் திட்டம், இந்தப் பிராந்தியத்தின் ஸ்திர நிலைமை மற்றும் பாதுகாப்பு விடயங்களுக்கு மிக அச்சுறுத்தலானது என்ற இந்தியாவின் எச்சரிக்கை - சிரத்தை - கவனம் - போன்றவை புறம் தள்ளத்தக்கதல்ல.

ஆனால் அவற்றை எல்லாம் புறமொதுக்கி, தன்பாட்டில், தன்னிஷ்டப்படி காரியங்களை முன்னெடுக்கிறது இலங்கை. புளொட் தலைவர் சித்தார்த்தன் எம்.பி. கூறியபடி இந்த அணுகுமுறை விபரீதங்களைத் தேடி தந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

# இராணுவம் விடுவித்த கட்டடத்தை பொதுத் தேவைக்குப் பயன்படுத்துக!

## பிரதேச மக்கள் கோரிக்கை

(அ.அஸ்வர்)

சாய்ந்தமருது இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருந்த கட்டடத்தைப் பிரதேசத்தின் பொதுவான அலுவலகத் தேவைக்காக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று பொது மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

சாய்ந்தமருது கடற்கரை வீதி சிறுவர் சதுக்கத்துக்கு முன்னால் இயங்கி வந்த தற்காலிக இராணுவ முகாம் தற்பொழுது அங்கிருந்து முழுமையாக அகற்றப்பட்டுள்ளது. இதற்காக பயன்படுத்தப்பட்ட கட்டடம் மூடிய நிலையில் காணப்படுகிறது.

உரிய கட்டடமும் இடப்பரப்பும் துரித நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படாமல் கவனிப்பாரற்ற நிலையில் இருக்குமாயின் அது சமூக விரோத செயல்களுக்கு உட்படலாம் எனவும் இதனால் பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படலாம் எனவும் பொது மக்களால் சுட்டிக்காட்டப்படுகிறது.

சாய்ந்தமருதில் பொதுத் தேவைகளுக்கான இடவசதிகள் இல்லாதிருக்கும் நிலையினைக் கவனத்தில் கொண்டு உரிய கட்டடத்தை பாழடைய விடாது உடனடியாக பொருத்தமான அரச அலுவலகம் ஒன்றாகவோ அல்லது பொதுத் தேவைக்கான நிலையமாகவோ பயன்படுத்தும் வகையில் சாய்ந்தமருது பிரதேச செயலக நிர்வாகம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று பொது மக்கள் மற்றும் பொதுநல அமைப்புகள் கோரிக்கை விடுக்கின்றன.

கடந்தகாலங்களில் போதைப் பொருள் கடத்தல் போன்ற சமூக விரோத செயல்கள் இடம்பெற்றமை காரணமாகவே பலரது வேண்டுகோளுக்கும் இணங்க இங்கு இராணுவ முகாம் அமைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐஸ் போதையுடன் கைதானவருக்கு செப். 7 ஆம் திகதிவரை மறியல்



(பௌசுல் றிபாஸ்)

அக்கரைப்பற்று பனங்காட்டுப் பகுதியில் ஐஸ் போதைப் பொருளுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.எச்.எம். ஹம்ஸா உத்தரவு பிறப்பித்துள்ளார்.

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பனங்காட்டுப் பகுதியில் 37 கிராம் 640 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருளுடன் ஒருவர் கடந்த வாரம் கைது செய்யப்பட்டிருந்தார்.

இந்தச் சந்தேக நபர் ஐஸ் போதைப் பொருள் வைத்திருந்தமை தொடர்பாக திருக்கோவில் விஷேட அதிரடிப் படையினருக்குக் கிடைத்த இரகசியதகவலைத்தொடர்ந்து குறித்த பிரதேசத்துக்குச் சென்று நபரை கைது செய்த அதிரடிப் படையினர், மாவட்ட பொலிஸ் அத்தியட்சகரின் அனுமதியுடன் நீதிமன்றில் ஆஜர்படுத்தியிருந்தனர்.

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்திய போது சந்தேக நபரை 72 மணித்தியாலம் பொலிஸ் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ளுமாறும் விசாரணை முடிந்தவுடன் சந்தேக நபரை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்துமாறும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிக்கு நீதிபதி ஹம்ஸா கட்டளை பிறப்பித்திருந்தார்.

இவ்வாறு தடுப்பு காவல் விசாரணை நிறைவடைந்ததும் மீண்டும் நீதிமன்றில் ஆஜர்படுத்திய போது சந்தேக நபரை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# சாதனையாளர்கள் கௌரவிப்பு







**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

மட்டக்களப்பு, கிரான்குளம் கல்வி அபிவிருத்தி சங்கத்தினரால் வருடாந்தம் சாதனையாளர்கள் கௌரவிக்கப்பட்டு வருகின்றனர். இந்த வருடமும் கௌரவிப்பு இடம்பெற்றுள்ளது.

கிரான்குளம் கல்வி அபிவிருத்தி சங்கம் ஒழுங்குசெய்திருந்த வருடாந்த சாதனையாளர்கள் கௌரவிப்பு கிரான்குளம் சீமூன் கார்டன் வரவேற்பு மண்டபத்தில் இடம்பெற்றது.

சங்கத் தலைவர் என்.இராமேஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் பல்கலைக்கழக அனுமதி பெற்ற, கல்விக் கல்லூரிகளுக்கு தெரிவு செய்யப்பட்ட, தாதி உத்தியோஸ்தர்களாக தெரிவு செய்யப்பட்ட, க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளை பெற்ற, 5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள் என அனைத்துத் தரப்பினரும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்விற்கு முதன்மை அதிதியாக கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வ.கனகசிங்கம் கலந்து கொண்டார்.



# விவசாய மேம்பாடு குறித்த சந்திப்பு

(பௌசுல் றிபாஸ்)

மகா போக விவசாய நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கில் திட்ட முகாமைத்துவக் குழுக் கூட்டம் சம்மாந்துறையில் இடம் பெற்றது.

சம்மாந்துறை பிரதேச நீர்ப்பாசன பொறியியலாளர் எம்.எஸ்,எம்,நவாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மோறாவில், பட்டம் பிட்டி பிரிவுகளின் திட்ட முகாமைத்துவ குழு உறுப்பினர்கள், அனைத்து விவசாய பிரதிநிதிகள் மற்றும் நீர்ப்பாசனத் திணைக்கள பொறியியல் உதவியாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், தொழில் நுட்ப உதவியாளர்கள் கலந்து கொண்டனர்.

விவசாயிகளால் பல்வேறு ஆக்கபூர்வமான கருத்துகள் முன்வைக்கப்பட்டன. அவை அனைத்துக்கும் தீர்வுகள் வழங்கப்பட்டு எதிர்வரும் வேளாண்மை செய்கையை சிறப்பாக செய்வதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று இதன்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.



# சமுர்த்தி வங்கிகளை கணினி மயமாக்கத் திட்டம்



(நவாஸ் )

சமுர்த்தி வங்கி மற்றும் வங்கிச் சங்களின் கணினிமயப்படுத்தலுக்கான மென்பொருள் மேம்படுத்தல் மற்றும் எதிர்கால அபிவிருத்தி செயற்பாடுகளை முன்கொண்டு செல்லும் வகையிலான ஆறு நாள் பயிற்சி செயலமர்வின் முதல் நாள் நிகழ்வுகள் இன்று (26) ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஆலையடிவேம்பு பிரதேச செயலக சமுர்த்தி தலைமையக முகாமையாளர் ந.கிருபாகரனின் ஒத்துழைப்போடு முகாமைத்துவ பணிப்பாளர் சிவப்பிரியா சுதாகரன் ஒருங்கிணைப்பில் செயலமர்வு ஆரம்பமாகியது.

வளவாளர்களாக அம்பாறை மாவட்ட சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் டி.எம்.குணவர்த்தன மற்றும் அம்பாறை மாவட்ட வங்கி கணினி மேம்படுத்தல் திட்ட முகாமையாளர் ரி.தெய்வேந்திரன் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

சமுர்த்தி வங்கி மற்றும் வங்கிச் சங்கம், தலைமைப்பீட காரியாலயம் சமுர்த்தி கட்டுப்பாட்டுச்சபை உறுப்பினர்கள் என பல்வேறு தரப்பினருக்கும் ஆறு நாள்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இப்பயிற்சி செயலமர்வில் ஆலையடிவேம்பு அக்கரைப்பற்று மற்றும் இறக்காமம் பிரதேச செயலகத்தை சேர்ந்த உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.





# அக்கரைப்பற்று பிரதேசத்தில் பசுமை வேலைத் திட்டம்

(நவாஸ்)

அக்கரைப்பற்று பிரதேச செயலகத்தை பசுமைப் பிரதேச செயலகமாக மாற்றும் வேலைத் திட்டத்தின் கீழ் பிரதேச செயலகத்தின் ஒரு பகுதியைப் பொது மக்கள் நேய பூங்காவாக மாற்றும் வேலைத்திட்டம் அக்கரைப்பற்று ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வில் அக்கரைப்பற்று பிரதேச செயலர், உதவிப் பிரதேச செயலர், மாவட்ட கலாச்சார உத்தியோகத்தர் என பலரும் கலந்து கொண்டனர்.



# கைப்பேசி பாவிக்கும் குழந்தைகள் பெற்றோரை எதிரிகளாகக் கருதும்!

## கல்விப் பணிப்பாளர் உமர் மௌலானா தெரிவிப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

கைப்பேசி பாவிக்கும் குழந்தைகள் மனநலம் குன்றி, பெற்றோரை எதிரிகளாக கருதும் அவலநிலை உருவாகும். எனவே குழந்தைகளுக்குக் கைப்பேசியை வழங்காதீர்கள் .

இவ்வாறு அன்னமலை ஸ்ரீ சக்தி வித்தியாலய கொடையாளர் கௌரவிப்பு விழாவில் உரையாற்றிய சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா தெரிவித்தார்.

இந்தக் கொடையாளிகள் கௌரவிப்பு விழா பாடசாலை அதிபர் பொன் பாரதி தாசன் தலைமையில் நேற்று முன்தினம் (26) நடைபெற்றது.

கௌரவ அதிதியாக சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா மற்றும் ஆசிரிய ஆலோசகர் பி.வி.குணரத்ன ஆகியோர் கலந்து கொண்டனர்.

அங்கு அன்னமலை கொடையாளிகளால் செய்யப்பட்ட அபிவிருத்தி திட்டங்கள் திறந்து வைக்கப்பட்டன.

கொடையாளி சித்திர சேனன் விஜிகரனின்( ஜேர்மனி) ஏற்பாட்டில் வரையப்பட்ட பாடசாலை மதில் சுவர் ஓவியங்கள் திறந்து வைக்கப்பட்டது.



அத்துடன் கொடையாளி அருள்ராஜா ஜெகதீசனின்(ஆஸ்திரேலியா) ஏற்பாட்டில் நிறுவப்பட்ட கொடிக் கம்ப தளம் மற்றும் காலை ஆராதனை மேடை என்பன திறந்து வைக்கப்பட்டன.

கொடையாளி கே.எம்.நிறோஜன் (கொழும்பு) ஏற்பாட்டில் பெற்றார் ஆசிரியர் ஒன்று கூடல் மண்டபத்துக்கான அடிக்கல் நடப்பட்டது.

அங்கு வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா மேலும் பேசுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு–

கைப்பேசிகளால் எமது நிம்மதி குறைகிறது. குறிப்பாகக் குழந்தைகள் மத்தியில் தொலைபேசி மற்றும் இணையம் ஆகியவற்றின் அதிக பயன்பாடு காரணமாக குழந்தைகளுக்கு ஞாபக மறதி ஏற்படுவதற்கான சாத்தியம் உள்ளது.

குழந்தைகள் வெகுவாக இணையக் காணொளியில் விளையாட்டுகளுக்கு அடிமையாகின்றனர்.

இணையக் காணொளி விளையாட்டு போட்டிகளில் குழந்தைகள் தீவிரமாக அவதானம் செலுத்துவதால் மனநல நோய்க்கு உள்ளாகின்றனர். இதனால் பிள்ளைகள் கல்வியில் தோல்வியடைந்து பெற்றோரை எதிரிகளாக நோக்குகின்றனர்.

இதனால் குழந்தைகளின் எதிர்காலம் முற்றாக அழிந்துவிடும். எனவே குழந்தைகளுக்கு இயன்றவரை கையடக்க தொலைபேசியை வழங்குவதை பெற்றோர் தவிர்த்துக்கொள்ள வேண்டும். – என்றார்.

# காங்கிரஸின் பிரதமர் வேட்பாளர் அறிவிப்பு 'பேரழிவுக்கான பயணச்சீட்டு' என்கிறது பா.ஜ.க.




அடுத்தாண்டு நடைபெற இருக்கும் மக்களைத் தேர்தலுக்கான பிரதமர் வேட்பாளராக ராகுல் காந்தியை காங்கிரஸ் கட்சி அறிவித்துள்ள நிலையில், அதனை பேரழிவுக்கான பயணச் சீட்டு என்று பா.ஜ.க. கேலி செய்திருக்கிறது.

பா.ஜ.கவின் சமூக வலைத்தள பக்கத்தில் இன்று வெளியிடப்பட்டுள்ள கேலிச் சித்திரத்தில், ராகுல் காந்தி விமானம் ஒன்றில் பறப்பது போல வரையப்பட்டுள்ளது. அதன் கீழே ' உங்கள் பேரழிவுக்கான பயணச்சீட்டு'என்று கூறிப் பிடப்பட்டுள்ளது.

மக்களவைத் தேர்தலுக்கான பிதரமர் வேட்பாளர் ராகுல் காந்தியே என்று ராஜஸ்தான் முதல்வரும், காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவருமான அசோக் கெலாட் தெரிவித் திருந்தார்.

புதிதாக தொடங்கப்பட்டுள்ள 26 கட்சிகளின் கூட்டணியான இண்டியா குறித்து பேசிய அவர், அனைத்துக் கட்சிகளின் ஆலோசனை மற்றும் விவாதங்களுக்கு பின்னர் இந்த முடிவு எடுக்கப்பட்டது. ஒவ்வொரு வாக்குப்பதியின் போதும் உள்ளூர் நிலவரம் ஆதிக்கம் செலுத்தும்.

ஆனால் நாட்டின் தற்போதைய சூழ்நிலை அனைத்து தரப்பினர் மீதும் ஒரு அழுத்தத்தை உருவாக்கியுள்ளது. பொதுமக்கள் இந்த அழுத்தத்தை உருவாக்கியுள்ளனர். அதன்விளைவாக அனைத்துக் கட்சிகளின் கூட்டணி உருவாகியுள்ளது என்று தெரிவித்தி ருந்தார்.

கெலாட்டின் இந்த அறிவிப்பினைத் தொடர்ந்து பா.ஜ.க. இவ்வாறு கேலிச்சித்திரம் மூலம் வெளியிட்டு எதிர் வினையாற்றியுள்ளது.

நடைபெறவுள்ள மக்களவைத் தேர்தலில் பா.ஜ.கவின் தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியை எதிர் கொள்ளும் வகையில் , எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த 26 கட்சித் தலைவர்களால் இண்டியா கூட்டணி அறிவிக்கப்பட்டது.

எதிர்க்கட்சிகளின் இந்தக் கூட்டணி குறித்து தொடர்ந்து விமர்சித்து வரும் பிரதமர் மோடி, இண்டியா கூட்டணி ஊழலை ஊக்குவிப்பதற்காகவே உருவாக்கப்பட்டுள்ளது மாறாக நாட்டுக்கு சேவை செய்வதற்காக இல்லை என்றும், இந்த கூட்டணி சொந்த ஆதாயங்களுக்காக உருவாக்கப்பட்டுள்ளது. குடும்பமே பிரதானம், தேசநலன் தேவையில்லை என்பதே அவர்களின் நோக்கம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## தமிழகத்தில் தனிநபர் வருமானம் 1.66 லட்சம் ரூபாவாக அதிகரிப்பு

### - அமைச்சர் தங்கம் தென்னரசு தகவல்



2022-2023 ஆம் ஆண்டுகளில் தமிழகத்தில் தனிநபர் வருமானம் 1 லட்சத்து 66 ஆயிரத்து 727 ரூபாயாக உயர்ந்திருக்கிறது. இந்த காலப்பகுதியில் இந்திய அளவில் 98 ஆயிரத்து 374 ரூபாவாக உள்ளது என்று தமிழக நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு கூறி யுள்ளார்.

தமிழக நிதியமைச்சர் தங்கம் தென்னரசு சென்னையில் இன்று ஊடகவியலாளர்களை சந்தித்தார். இதன்போது கருத்து தெரிவித்த அவர், விலைவாசி உயர்வை எடுத்துக் கொண்டால்,தமிழகத்தில் குறைவாக இருக்கிறது. 2021-2022 ஆம் ஆண்டுகளில் இங்கு பணவீக்கம் 7.92 சதவீதமாகவும், 2022-2023 ஆம் ஆண்டுகளில் 5.97 சதவீதமாகவும் காணப்படுகிறது. இந்திய அளவில் 2021-2022 ஆண்டுகளில் 19.31 ஆகவும், 2022-2023 ஆம் ஆண்டுகளில் 8.82 ஆகவும் இருக்கிறது.

கொரோனா தொற்றுக் காலத்துக்குப் பின்னர் ஒட்டுமொத்த வளர்ச்சி எதிர்மறையாக இருந்தபோது, தமிழக பொருளாதாரம் நேர்மறையாக ஒரு நிலையான இடத்தில்தான் இருந்தது. அதன்பிறகு தமிழகத்தின் பொருளாதார நிலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

இதற்கு காரணம், முதல்வர் ஸ்டாலின் வழிகாட்டுதலின் படி நடந்துள்ள திட்டங்கள், அவர் வகுத்துள்ள பொருளாதார நோக்கங்கள், மாநில திட்டக் குழுவின் ஆலோசனைகள் மற்றும் நடவடிக்கைகள்.

தமிழகம் மின்னணு ஏற்றுமதியில் முன்னணியில் இருக்கிறது. ஏறத்தாழ இரண்டரை லட்சம் கோடி அளவுக்கு தொழில் முதலீடுகள் வந்திருக்கிறது என்றால், இதற்கு அடிப்படையான காரணம் முதல்வர்தான் என்று தெரி வித்துள்ளார்.

## 'இண்டியா' பெயரைக் கேட்டால் பா.ஜ.க. அலறுகிறது!

இண்டியா என்ற பெயரைக் கேட்டாலே பா.ஜ.க. அரசு அலறக் கூடிய நிலை உருவாகியிருக்கிறது என்று திமுக தலைவரும், தமிழக முதல்வருமான ஸ்டாலின் கூறியுள் ளார்.

தி.மு.க. தலைவர் பொறுப்பேற்று 5 ஆண்டுகள் முடிந்து, 6 ஆம் ஆண்டு தொடங்குவதையொட்டி, அக்கட்சியின் தலைவரும், தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் தனது கட்சித் தொண்டர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அந்தக் கடிதத்தில், தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியா முழுவதுமே மதவாத இருட்டை விரட்டும் விடியல் தேவைப்படுகின்ற காலம் இது. அதற்காகத்தான் திமுக உள்ளிட்ட 26 கட்சிகள் இணைந்த 'இண்டியா' கூட்டணி உருவாக்கப்பட்டுள்ளது. 'இண்டியா' என்ற பெயரைக் கேட்டாலே ஒன்றிய பா.ஜ.க. அரசு அலறக் கூடிய நிலை உருவாகியிருக்கிறது. உண்மையான இந்தியா நம் பக்கம்தான் இருக்கிறது என்று குறிப் பிட்டுள்ளார்.

# ரஷ்யா - உக்ரைன் மோதலை தீவிரப்படுத்துகிறது நேட்டோ!

ரஷ்யா – உக்ரைன் மோதலை நேட்டோ அமைப்பு தொடர்ந்து தூண்டிவிட்டு வருகிறது என அதன் உறுப்பு நாடுகளில் ஒன்றான ஜெர்மனி குற்றம்சாட்டியுள்ளது.

இதன் காரணமாக ஜெர்மனி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

உலகம் முழுவதும் போர்களை நேட்டோ நடத்தி வருகிறது என அவர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

இதன்போது போர் வேண்டாம், அமைதியே வேண்டும், ஆயுதங்கள் அமைதியை தராது போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை ஏந்தியபடி அவர்கள் பேரணி சென்றுள்ளனர்.

லிபியா, ஆப்கானிஸ்தான், ஈராக் நாடுகளை ஆக்கிரமித்து நேட்டோ போர் நடத்தியதாக போராட்டக்காரர்கள் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கா மற்றும் பிற மேற்கத்திய நாடுகள் உக்ரைனுக்கு ஆயுதங்களை அனுப்பி அந்நாட்டுக்கு நெருக்கடியை



ஏற்படுத்தி வருவதாக கூறிய அவர்கள், உக்ரைனுக்கு ஆயுத உதவி உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர்.

பொருளாதார பாதிப்பு, பணவீக்கம் என ஜெர்மனி பிரச்சனைகள் உள்ள நிலையில், உக்ரைனுக்கு ஜெர்மனி ஆயுத உதவி வழங்கி வருவதை போராட்டக்காரர்கள் கடுமையாக விமர்சித்துள்ளனர்.

## சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு விண்வெளி வீரர்கள் அனுப்பப்பட்டனர்!



புதிய விண்வெளி வீரர்கள் குழுவொன்று சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அனுப்புவதற்கான ஏற்பாடுகளை ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்துடன் சேர்ந்து நாசா விண்வெளி நிலையம் முன்னெடுத்திருந்தது.

அதன்படி, நேற்று அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் உள்ள கென்னடி விண்வெளி மையத்தில் இருந்து 4 விண்வெளி வீரர்களுடன் பால்கன்-9 விண்கலம் மூலம் நான்கு விண்வெளி வீரர்கள் சர்வதேச விண்வெளி மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என நாசா நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்தநிலையில், பூமியில் இருந்து பால்கன் 9 ரொக்கெட் மூலம் 4 வீரர்களுடன் அனுப்பப்பட்ட டிராகன் விண்கலம், நேற்று சர்வதேச விண்வெளி நிலையத்தை சென்றடைந்தது என நாசா நிறுவனம் தெரிவித்துள்ளது.

அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் உள்ளிட்ட நாடுகள் இணைந்து விண்வெளியில் சர்வதேச விண்வெளி நிலையத்தை அமைத்து உள்ளன.

பூமியில் இருந்து 410 கிலோ மீட்டர் உயரத்தில் இயங்கி வரும் இந்த விண்வெளி நிலையத்தில் அமெரிக்கா, ரஷ்யா மற்றும் பிற உறுப்பு நாடுகளை சேர்ந்த விண்வெளி வீரர்கள் சுழற்சி முறையில் அங்கு தங்கியிருந்து ஆய்வு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்காக அமெரிக்க விண்வெளி நிறுவனமான நாசா, அமெரிக்காவின் தனியார் விண்வெளி நிறுவனமான ஸ்பேஸ் எக்ஸ் உடன் இணைந்து, விண்வெளி வீரர்களை சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அனுப்பி வருகிறது.

இறுதியாக கடந்த மார்ச் மாதம் 4 விண்வெளி வீரர்கள் சர்வதேச விண்வெளி நிலையத்துக்கு அனுப்பப்பட்டனர்.

அவர்களின் 6 மாத பணிக்காலம் விரைவில் முடிவடையவுள்ள நிலையில், அவர்களுக்கு பதிலாக புதிய விண்வெளி வீரர்கள் குழு நேற்று சர்வதேச விண்வெளி நிறுவனத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

## அமெரிக்காவில் இனவெறி தாக்குதல்: மூவர் பலி!



அமெரிக்காவில் இடம்பெற்ற இனவெறி துப்பாக்கிச்சூட்டில் கறுப்பினத்தவர்கள் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.


அமெரிக்காவின் புளோரிடா மாகாணம் ஜாக்சன்வெலி பகுதியில் நேற்று துப்பாக்கிச்சூடு இடம்பெற்றுள்ளது.

குறித்த பகுதியில் வெள்ளை இனத்தவர் தான் வைத்திருந்த துப்பாக்கியால் கறுப்பினத்தவர்கள் மீது சரமாரியாக துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளார்.

இந்த துப்பாக்கிச்சூட்டில் பெண் ஒருவரும், இரண்டு ஆண்களும் என கறுப்பினத்தவர்கள் 3 பேர் உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் குறித்து தகவலறிந்த பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்த போது பொலிஸார் வருவதற்குள் துப்பாக்கிச்சூடு நடத்திய வெள்ளை இனத்தவர் தன்னை தானே சுட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.


கசூரினா
படகுச் சேவை
சேவைகள்
01. மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றிப் பார்த்தல்
02. பவளப் பாறைகள் சுற்றிப் பார்த்தல்
03. வெளிச்சவீட்டு கடற்பகுதியைச் சுற்றிப் பார்த்தல்
04. பருத்தித்தீவு சென்று வருதல்
05. நயினாதீவு சென்று வருதல்
06. காரைநகர் கடற்கோட்டையைச் சுற்றிப் பார்த்தல்
காரைநகர் கசூரினா கடலில் கண்ணாடி இழைப்படகில் பயணித்தவாறே கடலின் அடியில் பவளப்பாறைகள் மற்றும் மீன் இனங்களை கண்டு ரசிக்கக் கூடிய விதத்தில் கண்ணாடி பொருத்தப்பட்ட படகுகள் இன்னும் சில வாரங்களில் எம்மால் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன.
கசூரினா படகுச்சேவை தொடர்புகளுக்கு : 077 078 3949